# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

**அசல்வழக்கு எண். 23/2022**

வா.சா.1- குறுக்கு விசாரணை-நாள் 09-09-2024.

பெயர் : செல்வராஜ் வா.சா.1

வா.சா.1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் கு.வி.-

(1) நானும் , பிரதிவாதி வேலுச்சாமியும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். தாவாச்சொத்து உள்ள கிராமத்தில் நான் கடந்த 10 வருடங்களக ஊராட்சி மன்ற தலைவராக இருந்துள்ளேன் என்றால் சரிதான். அதே கிராமத்தில்தான் தற்போதும் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி கிராமத்தில் தாவாச் சொத்து தவிர எனக்கு தனிப்பட்ட கிரைய சொத்துக்களும், பூர்வீக சொத்துக்களும் உள்ளது என்றால் இல்லை.

(2) நத்தம் சர்வே எண். 385/31-க்கு பிரதிவாதி பெயரில் 08-08-1994 ம் வருடம் அருப்புக்கோட்டை வருவாய் வட்டாட்சியர் ஒப்படைப்பு பட்டா வழங்கியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது என்கிறார் சாட்சி. அருப்புக்கோட்டை வருவாய் வட்டாட்சியர் பிரதிவாதிக்கு பட்டா கொடுத்துள்ளார் என்றும், அதன் அடிப்படையில்தான் பிரதிவாதி அந்த இடத்தில் குப்பை போட்டும், விறகு போட்டும் புழங்கி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. தாவாச் சொத்து எனக்கு எப்படி பாத்தியம் என்று சொல்கிறேன் என்றால் தாசில்தார் எனக்கும் ஒப்படைப்பு பட்டா வழங்கியுள்ளார் என்கிறார் சாட்சி.

(3) எப்போது பட்டா எனக்கு வழங்கப்பட்டது என்றால் 19-02-1996 ல் வழங்கப்பட்டது என்கிறார் சாட்சி. தாவாச் சொத்தின்

பட்டா எண் தெரியுமா என்றால் 861. சர்வே எண். 385/31 என்கிறார் சாட்சி. எனக்கு பட்டா வழங்கப்பட்ட 19-02-1996 ல் நான் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தேன் என்றால் சரியல்ல. அதேவருடம் 10 வது (அக்டோபர்) மாதத்திலிருந்துதான் நான் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தேன் என்கிறார் சாட்சி. நான் என்னுடைய பிராதில் ஜோதி என்பவருக்கு சர்வே எண். 385/2029 சொத்தினை கிரையம் கொடுத்துள்ளேன் என்றும், மேற்படி ஜோதிக்கும் பிரதிவாதிக்கும் மேற்படி சர்வே எண். சம்மந்தமாக பிரச்சினை ஏற்பட்டதில் வாதி, பிரதிவாதிக்கு ஆதரவாக இல்லாமல் நடுநிலைமையாக செயல்பட்டதால் வாதிக்கு பாத்தியமான தாவாச் சொத்தினை பிரதிவாதி அபகரிக்க முயற்சித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண். 385/29-ஐ நான் ஜோதிக்கு நான் கிரையம் கொடுத்தேனா என்றால் இல்லை.

(4) கடந்த 20-10-2021 ம் தேதி பிரதிவாதியின் மனைவி கோகிலவாணிக்கு நானும், என்னுடைய வகையறாவும் சேர்ந்து சர்வே எண். 385/29-ஐ பொறுத்து ஒரு கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். எங்களை ஏமாற்றி கிரையம் வாங்கிவிட்டதாக சாட்சி சொல்கிறார். மேற்படி கிரைய ஆவணத்தைப் பற்றி வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எங்களை ஏமாற்றி கிரையம் வாங்கியது சம்மந்தமாக ஏதாவது வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் ஏதாவது புகார் கொடுத்தேனா என்றால் இல்லை, மாவட்ட பதிவாளரிடம் புகார் கொடுத்தேன் என்கிறார் சாட்சி. மாவட்ட பதிவாளரிடம் புகார் கொடுத்தது சம்மந்தமாக ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கிற்காக பிரதிவாதி எங்களை ஏமாற்றி கிரையம் வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றும், அவ்வாறு எங்களை ஏமாற்றியிருந்தால் அந்த கிரைய ஆவணம் சம்மந்தமாக நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றும் சொன்னால் சரியல்ல.

(5) பிரதிவாதி பெயருக்கு வழங்கப்பட்ட ஒப்படைப்பு பட்டாவை ரத்து செய்வதற்கு எதாவது நடவடிக்கை எடுத்தேனா? என்றால் எனது பெயருக்கு பட்டா இருப்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை என்கிறார் சாட்சி. எனக்கு வழங்கப்பட்ட பட்டாவை ரத்துசெய்ய கோரி பிரதிவாதி அருப்புக்கோட்டை கோட்டாட்சியரிடம் மனுக்கொடுத்து அந்த விசாரணைக்கு நான் ஆஜராகி உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அருப்புக்கோட்டை வட்டாட்சியரையோ, கோட்டாட்சியரையோ இவ்வழக்கில் நான் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்றும், அவர்களை கட்சி சேர்க்காததால் என்னுடைய வழக்கு அவசியதரப்பினரை கட்சி சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவாச் சொத்தில் எனக்கு எவ்வித பாத்தியமும் இல்லை என்றும், நான் ஊராட்சி மன்ற தலைவராக இருந்ததால் பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட பட்டாவை மறைத்து எனது பெயருக்கு மோசடியாக பட்டா பெற்றுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.